Q.C-063

# DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)

| Name of the Test: | Departmental Test on Land Laws and other religious Acts for Hindu Religious and Charitable Endowments Department (Without Books) | 156 |
|---|---|---|

Maximum Time: 2.30 Hour

Maximum Marks: 100

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 100 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 100 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.
2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.
3. In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.
4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்.
5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. What does the Section 6B of Tamil Nadu Cultivating Tenants Protection Act, 1955 States?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955-ன் சட்டப்பிரிவு 6B எதைப்பற்றி குறிப்பிடுகிறது?

(A) Bar of jurisdiction of civil courts
உரிமையியல் நீதிமன்றங்களின் ஆள்வரைக்குத் தடை

(B) Power to make Rules
விதிகளை இயற்றும் அதிகாரம்

(C) Execution of Lease
குத்தகை ஒப்பந்தம் நிறைவேற்றம்

(D) Revision by High Court
உயர்நீதிமன்றத்தின் சீராய்வு

2. Under which section, Revenue Divisional Officer defines in Tamil Nadu Cultivating Tenants protection Act, 1955
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955-ன் எந்த சட்டப்பிரிவு கோட்டாட்சியரை வரையறை செய்கிறது.

(A) Section 2(g)
பிரிவு 2(g)

(B) Section 2(a)
பிரிவு 2(a)

(C) Section 2(f)
பிரிவு 2(f)

(D) Section 2(d)
பிரிவு 2(d)

3. Under which section, the term Garden Land defines to Tamil Nadu Cultivation Tenants Protection Act, 1955?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955-ன் எந்தப் பிரிவில் "தோட்டநிலம்" பற்றி வரையறுக்கிறது.

(A) Section 2(bb)
பிரிவு 2(bb)

(B) Section 2(b)
பிரிவு 2(b)

(C) Section 2(c)
பிரிவு 2(c)

(D) Section 2(d)
பிரிவு 2(d)

4. Under Tamilnadu Cultivation Tenants Protection Act time barred arears is
தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் காலக்கெடு முடிந்த குத்தகை பாக்கி என்பது எவ்வளவு காலத்திற்கான குத்தகை பாக்கியைக் குறிக்கும்?

(A) Below 1 year
ஒரு ஆண்டிற்கு கீழ்

(B) 1 to 2 years
1 முதல் 2 ஆண்டுகள்

(C) 2 to 3 years
2 முதல் 3 ஆண்டுகள்

(D) Beyond 3 years
3 ஆண்டுகளுக்கு மேல்

5. The Zamindari system was an innovation made by the
ஜமீன்தாரி முறையை கண்டுபிடித்தவர்கள் யார்?

(A) French
பிரஞ்சுக்காரர்கள்

(B) Indians
இந்தியர்கள்

(C) British
ஆங்கிலேயர்கள்

(D) Mohammedans
முகமதியர்கள்

6. Under Section (4) of Tamil Nadu cultivating tenants protection Act, who holds right to restoration of possession?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் சட்டப்பிரிவு 4-ன்படி நில உடமை திரும்ப பெறும் உரிமை யாருக்கு உள்ளது?

(A) Land Lord to Tenant
நில உடமைதாரரிடமிருந்து குத்தகைதாரருக்கு

(B) Tenant to Land Lord
குத்தகைதாரரிடமிருந்து நில உடமைதாரருக்கு

(C) Legal Heirs of Tenant to Land Lord
குத்தகைதாரரின் வாரிசுதாரரிடமிருந்து நில உடமைதாரருக்கு

(D) Sub Tenant to Land Lord
உள் குத்தகைதாரரிடமிருந்து நில உடமைதாரருக்கு

7. Tamil Nadu Cultivating Tenants protection act, who holds revisional power?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தில், யாருக்கு சீராய்வு செய்யும் அதிகாரம் உள்ளது?

(A) District Court
மாவட்ட நீதிமன்றம்

(B) High Court
உயர்நீதிமன்றம்

(C) Supreme Court
உச்சநீதிமன்றம்

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

8. Under Tamil Nadu cultivating tenants protection Act who enquire the dispute between land lord and cultivating tenant?
தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டத்தின் கீழ் நில உரிமையாளருக்கும் குத்தகைதாரருக்கும் உள்ள பிரச்சனைகளை விசாரிப்பவர் யார்?

(A) Revenue officer
வருவாய் அலுவலர்

(B) Tahsildar
வட்டாட்சியர்

(C) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாட்சியர்

(D) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

9. The term Cultivating Tenant includes in Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 is
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1956-ன் படி பயிரிடும் குத்தகைதாரர் என்பதில் கீழ்காணும் வரையறை உள்ளடக்கும்?

(A) Intermediary
இடைப்பட்டவர்

(B) Tenant
குத்தகைதாரர்

(C) Land Owner
நில உடமையாளர்

(D) Sub-Tenant
கீழ்க்குத்தகைதாரர்

10. Which month is called as "Agricultural Year" as per Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act 1956?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாய குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956-ன்படி எந்த மாதம் வேளாண் ஆண்டு அழைக்கப்படுகிறது?

(A) 1st day of January
1st day of ஜனவரி

(B) 1st day of April
1st day of ஏப்ரல்

(C) 1st day of October
1st day of அக்டோபர்

(D) 1st day of December
1st day of டிசம்பர்

11. Under which section of Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 says the Rights and Liabilities of the cultivating tenant?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956-ன்படி எந்த சட்டப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரின் உரிமைகள் மற்றும் பொறுப்புகளைப் பற்றி குறிப்பிடுகிறது.

(A) Section 3
பிரிவு 3

(B) Section 4
பிரிவு 4

(C) Section 4A
பிரிவு 4A

(D) Section 5
பிரிவு 5

12. In which section of the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 power to remove Difficulties has been prescribed?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாயக் குத்தகை செலுத்துதல்) சட்டம், 1956-ன் படி எந்தப் பிரிவில் இச்சட்டத்தினை அமல்படுத்துவதில் ஏற்படும் சிரமங்களை நீக்குவதற்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது?

(A) Section 15
பிரிவு 15

(B) Section 17
பிரிவு 17

(C) Section 18
பிரிவு 18

(D) Section 19
பிரிவு 19

13. Under which section shall not apply to the Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1955 cultivating tenants who having more than 6-2/3 acres of land?
எந்த சட்டப்பிரிவு 6-2/3 ஏக்கருக்கு மேல் நிலத்தை கொண்டு இருக்கும் பயிரிடும் குத்தகைதாரருக்கு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டம், 1955 பொருந்தாது என குறிப்பிடப்படுகிறது.

(A) Section 12
பிரிவு 12

(B) Section 13
பிரிவு 13

(C) Section 14
பிரிவு 14

(D) Section 15
பிரிவு 15

14. The Tamil Nadu cultivating tenants protection Act, 1955 makes provisions for protecting cultivating tenants against eviction by landlord under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம் 1955-ன் எப்பிரிவு பயிரிடும் குத்தகைதாரரை நில உரிமையாளரால் வெளியேற்றப்படுவதிலிருந்து பாதுகாப்பு செய்கிறது?

(A) 3

(B) 4

(C) 5

(D) 6

15. Tamil Nadu cultivating tenant payment of fair rent act not applicable to
எந்த நில குத்தகைக்கு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாயக் குத்தகை செலுத்துச் சட்டம் பொருந்தாது?

(A) Plantain
வாழை

(B) Dry land
புன்செய் பயிர்

(C) Manavari
மானாவாரி

(D) Wet land
நன்செய் பயிர்

16. Tamil Nadu cultivating tenant payment of fair rent act is not applicable to cultivating tenant one who cultivate more than ———— acres of land?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாயக் குத்தகை செலுத்தும் சட்டம் கீழ்க்கண்டவற்றில் எத்தனை ஏக்கருக்கு மேல் நிலம் வைத்திருப்பவருக்கும் குத்தகையதாரருக்கு பொருந்தாது.

(A) 6 2/3 acres
6 2/3 ஏக்கர்

(B) 7 3/4 acres
7 3/4 ஏக்கர்

(C) 8 1/2 acres
8 1/2 ஏக்கர்

(D) 9 2/3 acres
9 2/3 ஏக்கர்

17. If the cess reduced into half is called as
தீர்வையில் பாதியளவு குறைக்கப்பட்ட மானியம் எவ்வாறு அழைக்கப்படுகிறது?

(A) Sathurpagam
சதுர்பாகம்

(B) Thasapantha maniyam
தசபந்த மானியம்

(C) Artha maniyam
அர்த்தமானியம்

(D) Sarva thumbula Maniyam
சர்வ தும்பல மானியம்

18. Under Tamil Nadu cultivating tenant payment of fair rent act, Alteration of fair rent specified in which section?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் நியாயக் குத்தகை செலுத்துச் சட்டத்தில், நியாய குத்தகை மாற்றுதல் எப்பிரிவில் குறிப்பிடப்பட்டுள்ளது?

(A) S.7
சட்டப்பிரிவு 7

(B) S.8
சட்டப்பிரிவு 8

(C) S.6
சட்டப்பிரிவு 6

(D) S.9
சட்டப்பிரிவு 9

19. Which section of the Tamil Nadu Cultivating Tenants (payment of Fair rent) Act 1956 will not apply to land owned by the Central Government, State Governments etc?
தமிழ்நாடு விவசாய குத்தகைதாரர்கள் (நியாய வாடகை செலுத்துதல்) சட்டம் 1956ல் எந்த பிரிவின்படி மத்திய மற்றும் மாநில அரசுக்கு உரிமையான நிலங்கள் கட்டுப்படாது

(A) Section 15
பிரிவு 15

(B) Section 18
பிரிவு 18

(C) Section 19
பிரிவு 19

(D) Section 17
பிரிவு 17

20. Under which section, the Record Officer comes in Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act, 1969?
தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம், 1969-ன்படி பதிவுறு அலுவலர் பற்றி எந்த சட்டப்பிரிவு குறிப்பிடுகிறது?

(A) Section 2(7)
பிரிவு 2(7)

(B) Section 2(8)
பிரிவு 2(8)

(C) Section 2 (6)
பிரிவு 2(6)

(D) Section 2(5)
பிரிவு 2(5)

21. Under which section, the Government has power to make rules under Tamilnadu Agricultural Land Record of Tenancy Rights Act, 1969?
தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டம், 1969-ன்படி அரசு விதிகளை இயற்றும் அதிகாரத்தினை எந்த சட்டப்பிரிவின் கீழ் பெறுகிறது?

(A) Section 18
பிரிவு 18

(B) Section 19
பிரிவு 19

(C) Section 20
பிரிவு 20

(D) Section 21
பிரிவு 21

22. Under which section of the TamilNadu Agricultural Lands Record of Tenancy Rights Act, 1969 penalty can be levied if a person gives false information?
தமிழ்நாடு விவசாய நிலங்கள் குத்தகை உரிமை ஆவணங்கள் சட்டம் 1969-ல் ஒருவர் தவறான தகவல்களை கொடுத்தால் எந்தப் பிரிவின் கீழ் தண்டனை விதிக்கப்படும்?

(A) Section 6
பிரிவு 6

(B) Section 8
பிரிவு 8

(C) Section 12
பிரிவு 12

(D) Section 14
பிரிவு 14

23. As per the Tamilnadu Agricultural land records of tendency right act 1969, through which account, local areas are designed as 'Village'?
தமிழ்நாடு வேளாண் பதிவுரு குத்தகை உரிமை சட்டம் 1969-ன் படி எந்த கணக்கின் மூலம் உள்ளூர் பகுதிகளை கிராம பகுதிகளாக வடிவமைக்கிறார்கள்?

(A) Revenue Account
வருவாய் கணக்கு

(B) Panchayat Account
பஞ்சாயத்து கணக்கு

(C) Government Account
அரசு கணக்கு

(D) Taluk Account
தாலுகா கணக்கு

24. The Permanent Settlement in India is intimately connected with
இந்தியாவில் நிலையான நிலவரி திட்டம் யாருடன் தொடர்புடையது?

(A) Wellesley
வெலஸ்லி

(B) Dalhousie
டல்ஹௌஸி

(C) Cornwallis
காரன்வாலிஸ்

(D) Canning
கானிங்

25. One Veli means
ஒரு வேலி என்பது?

(A) 6 2/3 Acres

(B) 7 2/3 Acres

(C) 8 2/3 Acres

(D) 11 2/3 Acres

26. Which Section of the Tamil Nadu Revenue Recovery Act 1864 specifies the articles exempted from distraint?
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் / சட்டத்தின் 1864 எந்தப்பிரிவு கைப்பற்றுதலுக்கு விலக்களிக்கப்பட்ட பொருட்களைப் பற்றிக் கூறுகிறது?

(A) Section 14 A
சட்டப்பிரிவு 14 A

(B) Section 14
சட்டப்பிரிவு 14

(C) Section 15
சட்டப்பிரிவு 15

(D) Section 16
சட்டப்பிரிவு 16

27. According to Tamil Nadu Public Trust Act, 1961, who has the power to issue order and direction to the authorized officer and the Registrar?
தமிழ்நாடு பொது பொறுப்புரிமைச் சட்டம், 1961-ன் கீழ் கீழ்கண்ட யாருக்கு அதிகாரம் பெற்ற அலுவலர் மற்றும் பதிவாளருக்கு உத்தரவும் அறிவுரைகளையும் வழங்கும் அதிகாரம் உள்ளது?

(A) Governor
ஆளுநர்

(B) Government
தமிழக அரசு

(C) Collector
ஆட்சியர்

(D) Rent Tribunal
குத்தகை தீர்ப்பாயம்

28. All Rules and orders issued shall be published under Tamil Nadu Public Trust Act, 1961 is
தமிழ்நாடு பொது பொறுப்புரிமை அமைப்புச் சட்டம், 1961-ன் படி எல்லா விதிமுறைகளையும் உத்தரவுகளையும் கீழ்கண்ட எதில் வெளியிட வேண்டும்?

(A) Affixing on the walls of Taluk Office
தாலுகா அலுவலக சுவர்களில் ஒட்டுதல்

(B) Tamil Nadu Government Gazette
தமிழக அரசிதழ்

(C) District Gazette
மாவட்ட அரசிதழ்

(D) Daily Newspaper
தினசரி நாளிதழ்

29. In which section of the Tamil Nadu Public Trust Act, 1961, Co-operative farming society has been defined?
தமிழ்நாடு பொது கட்டளை சட்டம் 1961-ன் எந்தப் பிரிவில் கூட்டுறவு விவசாய சங்கம் என்பதை வரையறை செய்யப்பட்டுள்ளது?

(A) Section 2(3)
பிரிவு 2(3)

(B) Section 2(7)
பிரிவு 2(7)

(C) Section 2(10)
பிரிவு 2(10)

(D) Section 2(23)
பிரிவு 2(23)

30. Section 2(27) of the Tamil Nadu Public Trust Act, 1963 define?
தமிழ்நாடு பொது கட்டளை சட்டத்தில் 1963 சட்டப்பிரிவு 2(27) எதைக் குறிக்கிறது?

(A) Rent Tribunal
குத்தகை தீர்ப்பாயம்

(B) Rent court
குத்தகை நீதிமன்றம்

(C) Board of Director
இயக்குநர் வாரியம்

(D) Rent court and rent tribunal
குத்தகை நீதிமன்றம் மற்றும் குத்தகை தீர்ப்பாயம்

31. Section 2(22) of the Tamil Nadu Public Trusts Act, 1961 defines the term
தமிழ்நாடு பொது கட்டளைகள் சட்டம் 1961-ன் பிரிவு 2(22) வரையறை செய்யும் பதம்?

(A) Normal gross produce
சாதாரண மொத்த உற்பத்தி

(B) Personal cultivation
சுய சாகுபடி

(C) Plantation
தோட்ட விவசாயம்

(D) Possessory mortgage
அனுபவ பாத்திய அடமானம்

32. The Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural Lands) Act, cultivating tenant's maximum land ceiling area is ———— Standard acres.
தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் படி பயிரிடும் குத்தகைதாரரின் உச்ச வரம்பு நிலத்தின் பரப்பு ———— ஏக்கர்?

(A) 2

(B) 4

(C) 5

(D) 7

33. Tamil Nadu Public Trust Act 1961, the term, "Owner" define in
தமிழ்நாடு பொது பொறுப்புரிமை அமைப்பு சட்டம் 1961 "உரிமையாளர்" என்ற சொல் எந்த சட்டப்பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 2

(B) Section 2 (17)

(C) Section 2(19)

(D) Section 2(18)

34. Whose order shall be deemed as final in Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act, 1948
தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் - 1948ன் படி யாருடைய முடிவு இறுதியானது.

(A) Tribunal
தீர்ப்பாயம்

(B) Civil Court
உரிமையியல் நீதிமன்றம்

(C) District Court
மாவட்ட நீதிமன்றம்

(D) Government
அரசு

35. Under Inam (Estates) Abolition Act, 26-1963 who can grant patta in respect of private tanks or Ooranis?
இனாம் (எஸ்டேட்ஸ்) ஒழிப்பு சட்டம் 26/1963 தனியார் குளங்கள் மற்றும் ஊரணிக்கு கீழ்காணும் நபர்களில் பட்டா வழங்கும் அதிகாரம் பெற்றவர் யார்?

(A) Tribunal
தீர்ப்பாயம்

(B) Settlement Officer
செட்டில்மெண்ட் அலுவலர்

(C) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(D) Shall not be granted patta
பட்டா வழங்கிட இயலாது

36. An appeal can be filed under the Act of Tamil Nadu Estates Abolition Act, 1948
இனாம் (எஸ்டேட்ஸ்) ஒழிப்பு சட்டம் 1948-ன் படி மேல்முறையீடு எக்காலத்திற்குள் தாக்கல் செய்ய வேண்டும்?

(A) 3 Months
3 மாதங்கள்

(B) 6 Months
6 மாதங்கள்

(C) 9 Months
9 மாதங்கள்

(D) 10 Months
10 மாதங்கள்

37. As per Section 38 of the Tamil Nadu Estates (Abolition and Conversion into Ryotwari) Act 1948, explained about?
தமிழ்நாடு எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம், 1948ன்படி சட்டப்பிரிவு 38 எதை பற்றி விளக்குகின்றது?

(A) Land Holder
நில உடமையாளர்

(B) Repayment of Tasdik allowance and additional compensation
தஸ்திக் படி மற்றும் கூடுதல் இழப்பீடு செலுத்துதல்

(C) Tribunal
தீர்ப்பாயம்

(D) Board of Revenue
வருவாய் வாரியம்

38. The rent payable by the owners of permanently settled estates to Government is known as
நிலையாக குடியேறிய எஸ்டேட் உரிமையாளர்கள் அரசுக்கு செலுத்த வேண்டிய வாடகை எவ்வாறு அளிக்கப்பட்டது?

(A) Prishkush
பெய்ஸ்குஸ்

(B) Seikal
செய்க்கல்

(C) Lakhiraj
லக்கிரஜ்

(D) Darkhast
தர்கஸ்த்

39. In the system of Ryotwari, relationship between the government and the cultivating tenant
ரயத்வாரி முறையில் அரசிற்கும் குடியானவர்க்கும் உட்கிடையாக உள்ள அமைப்பு முறை என்பது

(A) Mortgage
அடமானம்

(B) Lease
குத்தகை

(C) Partnership
கூட்டாண்மை

(D) Contract
ஒப்பந்தம்

40. As per Tamil Nadu Inam estate (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 Which provision Ryotwari has got Ryotwari patta?
தமிழ்நாடு இனாம் எஸ்டேட் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றுதல்) 1963 சட்டத்தின் எந்த சட்டப்பிரிவு படி ரயத்வாரி, ரயத்வாரி பட்டா பெறுகிறார்?

(A) S. 13
சட்டப்பிரிவு 13

(B) S. 12
சட்டப்பிரிவு 12

(C) S. 11
சட்டப்பிரிவு 11

(D) S. 10
சட்டப்பிரிவு 10

41. Under Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 which provision determines rights of building?
தமிழ்நாடு மைனர் இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றுதல்) சட்டத்தில் 1963, கட்டிடத்தின் உரிமை எந்த பிரிவின் கீழ் தீர்மானிக்கப்படுகிறது.

(A) Section 4
சட்டப்பிரிவு 4

(B) Section 5
சட்டப்பிரிவு 5

(C) Section 13
சட்டப்பிரிவு 13

(D) Section 11
சட்டப்பிரிவு 11

42. An appeal against the determination or Ryotwari Patta lies under Inam Estates abolition Act 26/1963 to the following authority
இனாம் எஸ்டேட்ஸ் ஒழிப்பு சட்டம் 26/1963ன் கீழ் ஒரு நிலத்திற்கு ரயத்துவாரி பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து யாருக்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்.

(A) Director of Survey and Settlement
சர்வே மற்றும் செட்டில்மெண்ட் இயக்குநர்

(B) Collector
ஆட்சியர்

(C) Tribunal
ட்ரிபியூனல்

(D) Settlement Officer
நிலவரி திட்ட அலுவலர்

43. What does the Section 47A of Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act 1963 says?
தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 1963-ன் படி சட்டப்பிரிவு 47(A) எதைப் பற்றி கூறுகிறது?

(A) Power to make Rules
விதிகள் இயற்றும் அதிகாரம்

(B) Tribunal or other authority not to appoint receiver
தீர்ப்பாயம் அல்லது பிற அதிகாரக்குழு காப்பாளரை நியமிக்க முடியாது

(C) Repealed
நீக்கறவு

(D) Limitation
கால வரையறை

44. A person who had been personally cultivating a Inam Land on a which date and for a period of 12 years immediately before that date is eligible to get Ryotwari patta under Section 9(1)(iii) of The Minor Inam Abolition Act, 30/1963 says
மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 30/1963 பிரிவு 9(1)(iii) -ன்படி கீழ்காணும் எந்த ஒரு தேதி மற்றும் அதற்கு முன்னர் 12 வருடங்களுக்கு சொந்த விவசாயம் செய்ததை நிரூபித்திருந்தால் ரயத்துவாரி பட்டா பெற தகுதி ஆவார்?

(A) 26.09.1935
(B) 26.05.1945
(C) 26.09.1955
(D) 26.09.1965

45. Every Tribunal shall has a power as
ஒவ்வொரு தீர்ப்பாயமும் கீழ்கண்ட எத்தகைய அதிகாரம் கொண்டிருக்கும்

(A) Same as power vested in Civil Court
உரிமையியல் நீதிமன்றத்திற்கு சமமான அதிகாரம் போன்றது

(B) Power with some limitation
வரையறைக்குட்பட்ட அதிகாரம்

(C) As quasi judicial powers of the Civil Court
உரிமையியல் நீதிமன்றத்தின் அதிகாரப் பகிர்வு போன்றது

(D) As only the Executive power of the Civil Court
உரிமையியல் நீதிமன்றத்தின் நிர்வாக அதிகாரம் மட்டும்

46. As per the Tamil Nadu Minor Inams (Abolition and Conversion into Ryotwari) Act, 1963 Iruwaram Minor Inams granted for the support of maintenance of?
தமிழ்நாடு சிறு இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரியாக மாற்றுதல்) சட்டம் 1963-ன் சட்டத்தின் படி இரு வார மைனர் இனாம்கள் எதன் பராமரிப்பு ஆதரவுக்காக கொடை அளிக்கப்படுகிறது?

(A) Religious Institutions
மத நிறுவனங்கள்

(B) Individual person
தனிப்பட்ட நபர்

(C) Devotee
பக்தர்கள்

(D) Non Religious Institutions
மதசார்பற்ற நிறுவனங்கள்

47. Tax means
வரி என்பது

(A) Melvaram
மேல்வாரம்

(B) Melvaram and Kudivaram
மேல்வாரம் மற்றும் குடிவாரம்

(C) (A) and (B)
(A) மற்றும் (B)

(D) Ryotwari
ரயத்வாரி

48. Under Tamil Nadu Minor Inams (Abolition And Conversion into Ryotwari) Act Ryotwari patta is granted for
தமிழ்நாடு மைனம் இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றுதல்) கீழ்க்கண்டவற்றுள் எதற்கு ரயத்வாரி பட்டா வாங்க இயலும்?

(A) Forest
காடுகள்

(B) Temple Site
கோவில் இடம்

(C) Puramboke
புறம்போக்கு

(D) Vacant Site
காலியிடம்

49. Tamil Nadu Minor Inams (Abolition And Conversion into Ryotwari) Act, Who decide whether any land is forest or not
தமிழ்நாடு மைனர் இனாம் (ஒழிப்பு மற்றும் ரயத்துவாரி மாற்றுதல்) சட்டத்தின்படி, ஒரு நிலம் வனபகுதியா இல்லையா என்பதை யார் முடிவு செய்வார்?

(A) Assistant settlement Officer
உதவி நிலவரி திட்ட அலுவலர்

(B) Central Government
மத்திய அரசு

(C) State Government
மாநில அரசு

(D) District Collector
மாவட்ட ஆட்சியர்

50. Under Tamilnadu Minor Inams Abolition Act 30 of 1963 personal cultivation means
மைனர் இனாம் ஒழிப்பு சட்டம் 30/1963ன் படி சொந்த விவசாயம் என்பது

(A) Let on lease
குத்தகைக்கு விடுதல்

(B) Cultivation by paid labour
தொழிலாளர்கள் மூலமாக

(C) One contributes his own physical labour or by his family members
சொந்த ஊழியம் அல்லது குடும்ப அங்கத்தினர்கள் மூலமாக

(D) Cultivation by an Encroacher
ஆக்கிரமிப்பாளரால் விவசாயம்

51. The punishment for Obstructing Acquisition of land by Magistrate under land acquisition Act 1894 dealt under section
எந்தப் பிரிவின் படி நில எடுப்பு சட்டம், 1894 கீழ் நில எடுப்பினை தடை செய்யும் போது குற்றவியல் நீதிபதி தண்டனை வழங்க முடியும்

(A) Section 45
பிரிவு 45

(B) Section 46
பிரிவு 46

(C) Section 42
பிரிவு 42

(D) Section 43
பிரிவு 43

52. The Collector is defined under which section of Land Acquisition Act 1894
நில எடுப்பு சட்டம், 1894-ன் எந்த பிரிவில் மாவட்ட ஆட்சியர் வரையறுக்கப்பட்டுள்ளார்?

(A) Section 4
பிரிவு 4

(B) Section 3(c)
பிரிவு 3(c)

(C) Section 2
பிரிவு 2

(D) Section 6
பிரிவு 6

53. Who is entitled to cause a public notice as per Section 4 of Land Acquisition Act, 1894?
நில எடுப்பு சட்டம், 1894-ன் சட்டப்பிரிவு 4-ன் படி பொது அறிவிப்பு வெளியிடும் உரிமை யாருக்கு உள்ளது?

(A) Government
அரசு

(B) Commissioner
ஆணையர்

(C) Collector
ஆட்சியர்

(D) Land Acquisition Officer
நில எடுப்பு அலுவலர்

54. Under which section of Land Acquisition Act, 1894 Person interested defined?
நில எடுப்பு சட்டம், 1894-ல் எந்த பிரிவில் ஆர்வமுள்ள நபர் குறித்து வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Under section 3(a)
பிரிவு 3(a)

(B) Under section 3(aa)
பிரிவு 3(aa)

(C) Under section 3(b)
பிரிவு3(b)

(D) Under section 3(c)
பிரிவு 3(c)

55. Section 3(e) of the Land Acquisition Act, 1894 defines the term
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் பிரிவு 3(e) எந்த பதத்தை வரையறை

(A) Person interested
அக்கரையுள்ள நபர்

(B) Land
நிலம்

(C) Public Purpose
பொது நோக்கம்

(D) Company
நிறுவனம்

56. Which section of the Land Acquisition Act 1894 speaks about Declaration of Intended acquisition?
1894ம் ஆண்டு நில எடுப்பு சட்டத்தின் எப்பிரிவு நில எடுப்பு நடவடிக்கைகளுக்கான விளம்புகை குறித்து கூறுகிறது?

(A) 4

(B) 5

(C) 6

(D) 7

57. As per Land Acquisition Act under provision 11A District Collector make an award with in
நிலம் கையகப்படுத்துகை சட்டம், சட்டப்பிரிவு 11A-ன் படி மாவட்ட ஆட்சியர் எத்தனை ஆண்டுகளுக்குள் தீர்ப்பு அளிக்க வேண்டும்?

(A) 5 years
5 ஆண்டுக்குள்

(B) 3 years
3 ஆண்டுக்குள்

(C) 2 years
2 ஆண்டுக்குள்

(D) 1 year
1 ஆண்டுக்குள்

58. Stamp duty for land acquired under land acquisition act?
நிலம் கையகப்படுத்துதல் சட்டத்தில் கையகப்படுத்தப்பட்ட நிலத்திற்கான முத்திரை தாள் கட்டணம் யாது?

(A) 0%
(B) 2%
(C) 3%
(D) 5%

59. Who shall issue the Patta Pass Book for house site?
யாரால் வீட்டு மனைகளுக்கு பட்டாப்பதிவு புத்தகம் வழங்க முடியும்

(A) Deputy Tahsildar
துணை வட்டாட்சியர்

(B) Tahsildar
வட்டாட்சியர்

(C) District Collector
மாவட்ட ஆட்சியர்

(D) Village Administrative officer
கிராம நிர்வாக அலுவலர்

60. An Revision petition against the registration in the patta pass book 1983 shall be before the following officer
பட்டா பாஸ் புத்தக சட்டம் 1983-ன் படி பட்டா பாஸ் புத்தகத்தில் செய்யப்பட்டுள்ள பதிவை எதிர்த்து சீராய்வு மனு யாரிடம் செய்ய வேண்டும்?

(A) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

(B) Collector
மாவட்ட ஆட்சியர்

(C) Tahsildar
வட்டாட்சியர்

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்டாட்சியர்

61. Who gave the assent to the Tamil Nadu Ptta Pass Book Act, 1986?
யாரால் தமிழ்நாடு பட்டா பதிவு சட்டத்திற்கு 1986 இசைவு வழங்கப்பட்டது?

(A) Governor
ஆளுநர்

(B) Government of Tamil Nadu
தமிழ்நாடு அரசு

(C) Government of India
இந்திய அரசு

(D) President
குடியரசு தலைவர்

62. Sec 2(1)f in Patta Pass Book Act which is included in agriculture?
பிரிவு 2(1)f பட்டா பாஸ்புக் சட்டத்தின் கீழ் விவசாயத்தில் சேர்க்கப்பட்டது எது?

(A) Company
நிறுவனம்

(B) Departmental Store
பல்பொருள் அங்காடி

(C) Factory
தொழிற்சாலை

(D) Poultry Farming
கோழிப் பண்ணை

63. Tasdik and Mohini allowances relate to
தஸ்திக் மற்றும் மோகினி தொடர்புடையது

(A) Temples and Mosques
கோயில்கள் மற்றும் மசூதிகள்

(B) Temples only
கோயில்கள் மட்டும்

(C) Mosques only
மசூதிகள் மட்டும்

(D) Brahmins
பிராமணர்கள்

64. Which section define appeal against the issuance of Patta pass book Act 4/1986?
பட்டா பாஸ் புத்தக சட்டம் 4/1986ல் பட்டா வழங்கப்பட்டதை எதிர்த்து மேல்முறையீடு குறித்து எந்த பிரிவில் வரையறுக்கப்பட்டுள்ளது?

(A) Section 12
பிரிவு 12

(B) Section 9
பிரிவு 9

(C) Section 10
பிரிவு 10

(D) Section 13
பிரிவு 13

65. Under Revenue Recovery Act, 1864 dues payable to the State Government on Account of Water supplied for irrigation is called
வருவாய் மீட்பு சட்டம், 1864-ன் படி விவசாய பாசனத்திற்கு வழங்கிய தண்ணீருக்காக அரசுக்கு செலுத்த வேண்டிய தொகை இவ்வாறு அழைக்கப்படுகிறது.

(A) Government Revenue
அரசு வருவாய்

(B) Public Revenue
பொது வருவாய்

(C) Private Revenue
தனியார் வருவாய்

(D) Temple Revenue
கோயில் வருவாய்

66. Under which section of the Tamil Nadu Revenue Recovery Act, 1864, a land, the buildings upon it and its products shall be regarded as the security of the Public Revenue
தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம், 1864-ன் எந்தப் பிரிவில் ஒரு நிலம் அதில் உள்ள கட்டிடங்கள் மற்றும் அவற்றிலிருந்து வரும் பலன்கள் ஆகியவை பொது வருவாய்க்கு பிணையாக எடுத்துக் கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

(A) Section 2
பிரிவு 2

(B) Section 4
பிரிவு 4

(C) Section 6
பிரிவு 6

(D) Section 8
பிரிவு 8

67. When defaulter neglects to pay the arrears in Tamil Nadu Revenue Recovery Act of 1864?
தமிழ்நாடு வருவாய் வசூல் சட்டம், 1864 சட்டத்தின்படி தவறிழைத்தவர் பாக்கி செலுத்த தவறும்போது

(A) Attachment and sale of the defaulter land
கைப்பற்றி தவறிழைத்தவரின் நிலத்தினை விற்பனை செய்தல்

(B) Auction the land
நிலத்தை ஏலம் விடுதல்

(C) File a Civil Suit
உரிமையியல் வழக்கு தொடுத்தல்

(D) Take Criminal Action
குற்றவியல் நடவடிக்கை எடுத்தல்

68. Who has observed 'Really the Standing Orders' of the Board are the Land Revenue Code of this Province and no one can thoroughly master the revenue administration without studying these in detail"?
வருவாய் நிலை ஆணைகள் என்பது இந்த மாகாணத்தின் நில நிர்வாக நடைமுறைச் சட்டத் தொகுப்பு ஆகும் என்றும் இவற்றை முழுவதுமாகப் படிக்காதவர்கள் வருவாய் நிர்வாகத்தில் திறம்படச் செயல்பட முடியாது என்று கூறியவர் யார்?

(A) Baden Powell
பேடன் பவல்

(B) Sadasiva Iyer
சதாசிவ ஐயர்

(C) Sundararaja Iyengar
சுந்தரராஜ் ஐயங்கார்

(D) Col. Read
கலோனல் ரீட்

69. As per Tamil Nadu Revenue Recovery Act who set aside a sale?
தமிழ்நாடு வருவாய் மீட்பு சட்டப்படி யார் விற்பனையை ரத்து செய்வார்?

(A) Commissioner
ஆணையர்

(B) District Collector
மாவட்ட ஆட்சியர்

(C) RDO
மாவட்ட கோட்டாட்சியர்

(D) District Revenue officer
மாவட்ட வருவாய் அதிகாரி

70. In which section describes the rules to follow procedure in sale movable property of defaulter Under Revenue Recovery act 1864?
வருவாய் மீட்பு சட்டம் 1864-ல் தவறிழைத்தவரிடம் (defaulter) இருந்து கைப்பற்றப்பட்ட அசையும் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான வழிமுறைகளை தெரிவிக்கும் பிரிவு?

(A) Section 28
பிரிவு 28

(B) Section 36
பிரிவு 36

(C) Section 35
பிரிவு 35

(D) Section 39
பிரிவு 39

71. Under Revenue Recovery Act time for distress shall be
வருவாய் மீட்பு சட்டத்தின்படி ஜப்தி செய்யும் காலமானது

(A) Morning
காலை

(B) Evening
மாலை

(C) After sunrise and before sunset
சூரிய உதயத்திலிருந்து சூரியன் மறையும் வரை

(D) Mid day
நண்பகல்

72. On which date the assent was received from the Governor General for the act of Tamil Nadu Temple Entry Authorization Act, 1947?
எந்த தேதியில் தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டத்திற்கு 1947 கவர்னர் ஜெனரலிடமிருந்து இசைவு பெறப்பட்டது?

(A) 11th January 1947
11 ஜனவரி 1947

(B) 11th August 1947
11 ஆகஸ்ட் 1947

(C) 11th November 1947
11 நவம்பர் 1947

(D) 11th May 1947
11 மே 1947

73. Under Temple Entry Authorization Act, which provision provide any section of Hindus, right to passage over any scared place for obtaining access to the temple?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டத்தின் எப்பிரிவு இந்துக்களின் எப்பிரிவினருக்கும் கோயிலுக்குள் நுழைந்து புனிதமான இடங்களை கடந்து செல்ல உரிமை உள்ளது என குறிப்பிடுகிறது?

(A) Section 1
சட்டப்பிரிவு 1

(B) Section 2
சட்டப்பிரிவு 2

(C) Section 3
சட்டப்பிரிவு 3

(D) Section 4
சட்டப்பிரிவு 4

74. Tamil Nadu Temple Entry Authorization Act, under which provision any section of Hindus irrespective of Caste right to bath any sacred tank?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டத்தின் எப்பிரிவு இந்துக்களின் அனைத்து வகுப்பினரும் சாதி பாகுபாடின்றி திருக்கோயில் குளத்தில் நீராட வழிவகை செய்யப்பட்டுள்ளது?

(A) Section 2
சட்டப்பிரிவு 2

(B) Section 3
சட்டப்பிரிவு 3

(C) Section 5
சட்டப்பிரிவு 5

(D) Section 6
சட்டப்பிரிவு 6

75. Under Tamil Nadu Temple Entry Authorization Act, power of trustees defined?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டத்தின் எப்பிரிவு அறங்காவலரின் அதிகாரம் பற்றி தெரிவிக்கிறது?

(A) Section 3
சட்டப்பிரிவு 3

(B) Section 4
சட்டப்பிரிவு 4

(C) Section 4(a)
சட்டப்பிரிவு 4(a)

(D) Section 4(i)
சட்டப்பிரிவு 4(i)

76. When can be the restitution of Conjugal rights ordered?
எப்பொழுது மணவாழ்வு உரிமை மீட்டளிப்பு உத்தரவு வழங்க இயலும்?

(A) Sexual Harassment
பாலியல் தொந்தரவு செய்தல்

(B) If there is no reason for separation
பிரிவதற்கு எவ்வித காரணமும் இல்லாதிருத்தல்

(C) Husband's family members manipulating
கணவரின் குடும்ப உறுப்பினர்களின் கட்டுப்பாடு

(D) Treating as slave
அடிமைப்போல நடத்துதல்

77. Conditions for Hindu Marriage defined in which Section of Hindu Marriage Act, 1955.
இந்து திருமணத்திற்கான நிபந்தனைகள் இந்து திருமணசட்டம் 1955-ன் எந்தப் பிரிவில் சொல்லப்பட்டுள்ளன.

(A) Section 3
பிரிவு 3

(B) Section 4
பிரிவு 4

(C) Section 5
பிரிவு 5

(D) Section 6
பிரிவு 6

78. As per the Hindu Marriage Act, 1955, which one of the following is fit for the purpose of the restitution of conjugal rights
இந்து திருமணச் சட்டம், 1955-ன் படி கீழ்கண்டவற்றில் ஒன்று கலந்துறை மீட்டடைவிப்பு உரிமைக்கான நோக்கத்திற்கு ஏற்றதாக உள்ளது?

(A) To live together
சேர்ந்து வாழுதல்

(B) For getting divorce
மணமுறிவு பெறுவதற்காக

(C) For threatening
பயமுறுத்துவதற்காக

(D) To marry another person
மற்றொருவரை பெறுவதற்காக

79. In which year the age of bride groom and bride was amended in the Hindu Marriage Act. 1955?
இந்து திருமண சட்டம், 1955-ன் படி எந்த வருடத்தில் மணமகன் மற்றும் மணமகளின் வயது திருத்தம் செய்யப்பட்டது?

(A) 1978

(B) 1979

(C) 1980

(D) 1982

80. Under Hindu Marriage Act, Ceremonies of marriage specified in
இந்து திருமண சட்டத்தின் எந்த பிரிவு திருமண சடங்குகளை பற்றி குறிப்பிடுகிறது?

(A) Section 4
சட்டப்பிரிவு 4

(B) Section 5
சட்டப்பிரிவு 5

(C) Section 7
சட்டப்பிரிவு 7

(D) Section 11
சட்டப்பிரிவு 11

81. Tamil Nadu Prohibition of ritual and practice of Burying of alive person Act, 2002 implement as per

தமிழ்நாடு சடங்கு மற்றும் சம்பிரதாய சட்டம் 2002 ஆனது எதன்படி அமுல்படுத்தப்பட்டது?

(A) TN Act 44 of 2002

(B) TN Act 44(1) of 2002

(C) TN Act 44(3) of 2002

(D) TN Act 44(5) of 2002

82. Which is the period of imprisonment and fine determined for the contravenes of the provisions of the Sections 3, 4 or 5 under Tamil Nadu Prohibition of ritual and practice of Burying Alive of a person Act, 2002?

தமிழ்நாடு சடங்கு மற்றும் சம்பிரதாய சட்டத்தின் கீழ் உயிருடன் ஒருவரை புதைக்கும் தடை சட்டம் 2002-ன் பிரிவு 3,4 மற்றும் 5-ஐ மீறினதற்கு சிறைத் தண்டனை மற்றும் அபராதம் எவ்வளவு விதிக்கப்படும்?

(A) 2 years or fine Rs. 2,000/-

2 வருடங்கள் அல்லது அபராதம் ரூ.2,000/-

(B) 3 years or with fine upto Rs. 5,000/- or with both

3 வருடங்கள் அல்லது அபராதம் ரூ.5,000/- வரைக்கும் அல்லது இரண்டும்

(C) 1 year or fine upto Rs. 1,000/- or both

1 வருடம் அல்லது அபராதம் ரூ.1,000/- அல்லது இரண்டும்

(D) 5 years or fine upto Rs. 10,000/-

5 வருடங்கள் அல்லது அபராதம் ரூ.10,000/-

83. Which section of Tamil Nadu Animals and Birds Sacrifices Prohibition (Repeal) Act, 2004 abates all actions taken under the Principal Act and all proceedings there under pending before 20.02.2004.

தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகளை வதைப்பதை தடுக்கும் (திருத்தம்) சட்டம், 2004-ன் எந்த பிரிவின் கீழ் 20.02.2004-க்கு முன் நிகழ்ந்த நிகழ்வுகளுக்கான நடவடிக்கைகளைத் தள்ளுபடி செய்யலாம்?

(A) Under section 1(2)
பிரிவு 1(2)

(B) Under section 2
பிரிவு 2

(C) Under section 3
பிரிவு 3

(D) Under section 4
பிரிவு 4

84. Tamil Nadu Animals and Birds Sacrifices Prohibition Act was enacted
தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகளை வதைப்பதை தடுக்கும் சட்டம் இயற்றப்பட்ட ஆண்டு

(A) 1947
(B) 1948
(C) 1949
(D) 1950

85. Which Section prohibits the Animals or bird sacrifices in temple under Tamil Nadu Animal and Birds Sacrifices Prohibition Act 1950?
தமிழ்நாடு விலங்குகள் மற்றும் பறவைகளை பலியிடுதல் தடை சட்டம் 1950ல் எந்த பிரிவு திருக்கோயில்களில் பலியிடுவதை தடை செய்கிறது?

(A) Section 3
பிரிவு 3
(B) Section 3(i)
பிரிவு 3(i)
(C) Section 3(a)
பிரிவு 3(a)
(D) Section 4(i)
பிரிவு 4(i)

86. The Tamil Nadu Agricultural Lands of Tenancy Rights Act 1969 was initially brought into force in the Districts Tanjavur, Tiruchirapalli and Madurai with effect from
தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுருச் சட்டம் 1969 தஞ்சாவூர், திருச்சி மற்றும் மதுரை மாவட்டங்களில் செயல்படுததப்பட்ட நாள்

(A) 8th September 1969
1969 செப்டம்பர் 8
(B) 19th December 1969
1969 டிசம்பர் 19
(C) 5th March 1969
1969 மார்ச் 5
(D) 20th June 1969
1969 ஜுன் 20

87. Under Which Act the Tenant can Evict from the cultivating land?
எந்தச் சட்டத்தின் கீழ் குத்தகைதாரர்களை குத்தகை நிலத்திலிருந்து வெளியேற்ற இயலும்

(A) Tamil Nadu Cultivating Tenant Protection Act 1955
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் பாதுகாப்பு சட்டம் 1955
(B) Tamil Nadu Cultivating Tenant (Payment of fair rent) Act 1956
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் நியாய குத்தகை செலுத்து சட்டம் 1956
(C) Tamil Nadu Agricultural Lands Record of Tenancy Right Act 1969
தமிழ்நாடு வேளாண் உரிமைகள் பதிவுரு சட்டம் 1969
(D) Tamil Nadu Building (Lease and Rent Control) Act 1960
தமிழ்நாடு கட்டிடங்கள் (குத்தகை மற்றும் வாடகை) கட்டுப்பாடு சட்டம் 1960

88. As per Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956 an extent of one acre of Wet Land is equivalent ———— Acre of Garden land.
1956ம் ஆண்டு தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (நியாய குத்தகை செலுத்து சட்டம்) சட்டப்படி 1 ஏக்கர் நஞ்சை நிலத்திற்கு சமமான தோட்ட நிலம் ———— ஏக்கர்.

(A) One
ஒன்று

(B) One and half
ஒன்றரை

(C) Two
இரண்டு

(D) Three
மூன்று

89. Maximum limit of permitted to a public Trust for personal cultivation under the Tamil Nadu public Trusts (Regulation and Administration of Agriculture Land Act 1961).
1961 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் (ஒழுங்குபடுத்தலும் மற்றும் வேளாண்மை நிலங்களை நிர்வகித்தலும் சட்டம் 1961-ன்) படி ஒரு பொது அறக்கட்டளைக்கு சுய வேளாண்மைக்கு செய்திட அனுமதிக்கப்பட்ட உச்சவரம்பு

(A) 15 Standard Acre
15 ஸ்டேண்டர்டு ஏக்கர்

(B) 20 Standard Acre
20 ஸ்டேண்டர்டு ஏக்கர்

(C) 30 Standard Acre
30 ஸ்டேண்டர்டு ஏக்கர்

(D) 50 Standard Acre
50 ஸ்டேண்டர்டு ஏக்கர்

90. Duration of the fair rent in force determined under the Tamil Nadu cultivating Tenants (Payment of Fair Rent) Act, 1956.
1956 ஆம் ஆண்டு பயிரிடப்படும் குத்தகைதாரர் (நியாய குத்தகை வழங்குதல்) சட்டப்படி நிர்ணயிக்கப்பட்ட நியாய குத்தகை அமுலில் உள்ள கால அளவு

(A) 2 years
2 ஆண்டுகள்

(B) 3 years
3 ஆண்டுகள்

(C) 5 years
5 ஆண்டுகள்

(D) 6 years
6 ஆண்டுகள்

91. The competent officer to whom has to given by the Land Owner to evict the Tenant
குத்தகைதாரரை வெளியேற்ற நில உரிமையாளர் மனுதாக்கல் செய்ய வேண்டிய அலுவலர்

(A) Thasildar
வட்டாட்சியர்

(B) Revenue Divisional Officer
கோட்டாட்சியர்

(C) Collector
மாவட்ட ஆட்சியர்

(D) District Revenue Officer
மாவட்ட வருவாய் அலுவலர்

92. Fair Rent shall be ———— percent of the Normal Gross Produce or its value in money.
சாதாரண மொத்த விளைச்சலில் நியாய குத்தகையின் அளவு ———— சதவீதம் அல்லது அதற்கு சமமான மதிப்புள்ள பணமாகும்.

(A) 30
(B) 25
(C) 50
(D) 40

93. The Advisory Committee members hold the post for the period of ———— under Tamil Nadu lands record of Tenancy Right Act
தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமைகள் பதிவுரு சட்டத்தின் படி வழிகாட்டு குழு உறுப்பினர்களின் பதிவிக்காலம்

(A) 5 years
5 ஆண்டுகள்
(B) 3 years
3 ஆண்டுகள்
(C) 1 year
1 ஆண்டு
(D) 6 years
6 ஆண்டுகள்

94. The Tamilnadu Cultivating Tenants protection Act 1955 consist of ———— sections.
1955-ம் ஆண்டைய தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் (பாதுகாப்பு சட்டம்) ———— பிரிவுகளை கொண்டது.

(A) Four
நான்கு
(B) Seven
ஏழு
(C) Eight
எட்டு
(D) Ten
பத்து

95. ———— crop is omitted from section 15 of Amendment Act 1980, Under Tamil Nadu Cultivating Tenants (Payment of Fair Rent ) Act 1956.
பிரிவு 15, 1980 தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர் நியாய குத்தகை செலுத்தும் சட்ட திருத்தத்தின் 1956 கீழ் விலக்கு பெற்ற பயிர்

(A) Betal Vines
வெற்றிலைக் கொடி
(B) Banana
வாழை
(C) Sugarcane
கரும்பு
(D) Sesame
எள்

96. The Tamil Nadu agricultural lands record of Tenancy Right Act 1969 Section ———— defined the word "Tenant".
"குத்தகைதாரர்" என்ற சொற்றொடர், 1969 தமிழ்நாடு வேளாண் நிலங்கள் குத்தகை உரிமங்கள் பதிவுரு சட்டம்.

(A) 16A
(B) 2(3)
(C) 2(8)(1)
(D) 6(A)

97. The Tamilnadu Cultivating Tenants Protection Act, 1955 makes provision for revision by the High Court under section
தமிழ்நாடு பயிரிடும் குத்தகைதாரர்கள் பாதுகாப்புச் சட்டம், 1955ன் எப்பிரிவு உயர்நீதிமன்றத்தில் சீராய்வு மனு செய்வதற்கு வழி செய்கிறது?

(A) 5B
(B) 5C
(C) 6B
(D) 6C

98. Authority to decide any question arises as to whether a place is not a temple as defined under Tamil Nadu Temple Entry authorization act 1947?
தமிழ்நாடு கோயில் நுழைவு அங்கீகார சட்டம் 1947-ன்படி ஒரு இடம் கோயில் அல்ல என தீர்மானிக்க அதிகாரம் பெற்றவர்?

(A) Government
அரசாங்கம்
(B) Commissioner
ஆணையர்
(C) Joint Commissioner
இணை ஆணையர்
(D) Assistant Commissioner
உதவி ஆணையர்

99. Under the Tamil Nadu Public Trusts (Regulation of Administration of Agricultural lands) Act, ceiling on personal cultivating by public trust is ———— standard acres.
தமிழ்நாடு பொது அறக்கட்டளைகள் (விவசாய நிலங்களின் நிர்வாகத்தினை ஒழுங்குபடுத்துதல்) சட்டத்தின் படி சொந்த சாகுபடி நிலத்தின் உச்சவரம்பு ———— ஏக்கர்.

(A) 12
(B) 15
(C) 20
(D) 21

100. Who has got power to issue notice when the acquisition of land is less than ten acres and the value of land is than five lakhs?
நிலம் கையகப்படுத்துகை சட்டத்தின் படி நிலத்தின் அளவு 10 ஏக்கருக்குள்ளும், நிலத்தின் மதிப்பு ஐந்து இலட்சத்திற்கும் மேற்படாத நிலத்திற்கு யார் அறிக்கை வெளியிடுவார்?

(A) District Collector
மாவட்ட ஆட்சியர்

(B) Tahsildar
தாசில்தார்

(C) Government
அரசு

(D) Revenue Divisional Officer
வருவாய் கோட்ட அலுவலர்

---